# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 12.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்
### மாநிலத் தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7377/B/18**

திரு,P.செல்வராஜ் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மேற்கு வட்டம்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (12.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு,P.செல்வராஜ் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு M. ஜீவானந்தம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 10.07.2018 தேதியிட்ட மனுவில், சேலம் மாவட்டம், சேலம் தாலுக்காவின் தாசில்தார் அவர்கள் அரியாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண் 17/15ல் உள்ள 2 ஏக்கர் 96 செண்ட் விஸ்தீரணமுள்ள புன்செய் நிலத்திற்கு அங்கமுத்து கவுண்டர் கந்தசாமி அம்மணியம்மாள் பெயரில் பட்டா எண் 109 வழங்கியுள்ளார்கள் என்றும், அதன் பிறகு தலைமையிடத்து வட்டாட்சியர் சேலம் அவர்களால் 20.05.2003ல் வழங்கப்பட்ட செட்டில்மெண்ட் ஜமாபந்தி நபர்கள் சிட்டா உண்மைநகலில் அங்கமுத்து கவுண்டர் மகன் நடேசன் என்றும், சர்வே எண் 17/15A என்றும், விஸ்தீரணம் 0.28 ஹெக்டேர் என்றும், பட்டா எண் 304 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

மேலும் இது சம்பந்தமாகவே 5 இனங்களில் தகவல் கோரி சேலம் மாவட்டம், வருவாய் துறை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 20.08.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 05.10.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (12.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், 26.08.2019 அன்று தான், சேலம் மேற்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணியில் சேர்ந்ததாகவும், மனுதாரர் பிரிவு 6(1)ல் கோரியுள்ள தகவல்கள், தங்கள் அலுவலகத்தில் தேடிப் பார்த்ததில் கிடைக்கவில்லை என்றும், ஆகையால் மேற்படி மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் சேகரித்து வழங்க வேண்டிய காரணத்தால், கால அவகாசம் அளிக்கும் பட்சத்தில், 15 நாட்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி விடுவதாக விசாரணையின்போது உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், சேலம் மாவட்டம், சேலம் தாலுக்காவின் தாசில்தார் அவர்கள் அரியாகவுண்டம்பட்டி கிராமம், சர்வே எண் 17/15ல் உள்ள 2 ஏக்கர் 96 சென்ட் விஸ்தீரணமுள்ள புன்செய் நிலத்திற்கு அங்கமுத்து கவுண்டர் கந்தசாமி அம்மணியம்மாள் பெயரில் பட்டா எண் 109 வழங்கியுள்ளார்கள் என்றும், அதன் பிறகு தலைமையிடத்து வட்டாட்சியர் சேலம் அவர்களால் 20.05.2003ல் வழங்கப்பட்ட செட்டில்மெண்ட் ஜமாபந்தி நபர்கள் சிட்டா உண்மைநகலில் அங்கமுத்து கவுண்டர் மகன் நடேசன் என்றும், சர்வே எண் 17/15A என்றும், விஸ்தீரணம் 0.28 ஹெக்டேர் என்றும், பட்டா எண் 304 என்றும், மேலும் இது சம்பந்தமாக பல்வேறு கேள்விகளை பிரிவு 6(1) மற்றும் பிரிவு 19(1)ன்கீழ் கேட்டுள்ளதன் அடிப்படையில், பிரிவு 2Fன் வழங்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டது என்றும், கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் காலமாக வருவாய் துறைக்கு பல்வேறு மனுக்கள் அனுப்பியும், தன்னுடைய பட்டா சம்பந்தமான விவரங்கள் கிடைக்கப்பெறாததால், தன்னுடைய பட்டா சம்பந்தமான உண்மைதன்மையை அறிய முடியவில்லை என்று ஆணையத்தில் தெரிவித்து, தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று தருமாறு ஆணையத்திடம் வேண்டி கொண்டார்.

6. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு கிடைக்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான உண்மைதன்மையை, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ஆராய்ந்து 20 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

1. **மனுதாரரின் 10.07.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள**

தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, சேலம் மேற்கு வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 20 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது.

2. வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் சேலம் மேற்கு வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.

ஒம்/-ரா.பிரதாப்குமார்
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 7377/B/18</u>

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சேலம் மேற்கு வட்டம்,
சேலம் மாவட்டம்.

திரு,P.செல்வராஜ்,
த/பெ.(லேட்) பெரியதம்பி,
எண்.203/110A, அரியாகவுண்டம்பட்டி,
சூரமங்கலம் அஞ்சல்,
சேலம்-05

Copy to: File / Stock File
SC/PA/16.09.2019